02.09.2025

OS.75/2018.

PW1- முருகையா – த/பெ. மகாலிங்க நாடார்.

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.09.2025.

<u>குறுக்கு விசாரணை :</u> (3ம் பிரதிவாதி தரப்பில்)

1. என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தத்து பிள்ளைக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. என் முதல் மனைவி பெயர் என்ன என்றால் பத்திரகாளி. பத்திரகாளி உயிருடன் உள்ள போது மகேஷ்வரி என்பவரை 2ம் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான்.

3. பத்திரகாளி எப்போது இறந்தார் என்றால் 10 வருடத்திற்கு முன்பு இறந்தார்.

4. எனக்கும் பத்திகாளிக்கும் பரஸ்பர விவாகரத்து நடக்கவில்லை என்றால் சரிதான்.

5. நான் தத்தெடுத்ததாக கூறும் குழந்தையை எந்த ஊரில் தத்தெடுத்தேன் என்றால் சாத்தூர்.

6. 1,2 பிரதிவாதிகளை எனக்கு முன்பு தெரியாது என்றால் குழந்தை தத்தெடுத்த பின் தெரியும்.

7. நான் குலையநேரி கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால்

சரிதான்.

8. என் ஊருக்கும், சாத்தூருக்கும் பேச்சுவார்த்தை உறவினர்கள் இல்லை என்றால் சரிதான் ஆனால் பழக்க வழக்கம் உண்டு.

9. 1,2 பிரதிவாதிகள் எவ்வாறு எனக்குத் தெரியும் என்றால் பழக்க வழக்கத்தின் பேரில் தெரியும்.

10. 1,2 பிரதிவாதிகளுக்கு நான் தத்தெடுத்ததாக கூறப்படும் குழந்தையைத் தவிர வேறு குழந்தை உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

11. 1,2 பிரதிவாதிகள் ஏழ்மைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என என் பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளுக்கு கடன்கள் அதிகமாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

12. 20.01.2015ம் தேதி செந்தில்நாதன் என்ற குழந்தை சேத்தூர் அரசு மருத்துவமனையில் பிறந்ததை நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை வீட்டில் தான் நான் குழந்தையைப் பார்த்தேன். மேற்படி குழந்தை சுகப்பிரசவத்தில் பிறந்ததா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

13. குழந்தைக்கு செந்தில்நாதன் என்ற பெயரை யார் சூட்டினார் என்றால் நான் தான் சூட்டினேன். எங்கு வைத்து பெயர் சூட்டப்பட்டது

என்றால் குலையநேரி கிராமத்தில் வைத்து பெயர் சூட்டப்பட்டது. குலையநேரி கிராமத்திற்கு வருவதற்கு முன்பு வரை பெயர் சூட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் கடந்த 21.01.2015 ம் தேதியே குழந்தைக்கு செந்தில்நாதன் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றும் அதற்கான ஆவணம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரியல்ல.

14. குழந்தை பிறந்து எத்தனை நாட்களில் நான் அழைத்து வந்தேன் என்றால் 7 நாட்களில் அழைத்து வந்தேன். குழந்தையை அழைத்து வரும் போது யார் உடன் இருந்தார்கள் என்றால் குழந்தையை அழைத்து வரும் போது நான் மட்டும் தான் சென்றேன் தனிநபர்கள் வரவில்லை.

15. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குழந்தையின் தந்தை பெயர் ரமேஷ் பிரபு, தாயார் பெயர் அன்னபூரணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16. நான் குழந்தையை தத்தெடுக்க ஊருக்கு சென்ற விவரம் யாருக்குத் தெரியும் என்றால் என் அக்காவிற்கு மட்டும் தெரியும்.

17. குழந்தையை கொடுக்க வரும் போது குழந்தையின் இயற்கை பெற்றோர்களோ வேறு நபர்களோ குலையநேரி கிராமத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை.

18. வா.சா.ஆ.2 ஆவணத்தை யார் தயார் செய்தார் என்றால் நான் தான் தயார் செய்தேன்.

19. எனக்கு எழுத படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது கையொப்பம் மட்டும் செய்வேன்.

20. வா.சா.ஆ.2 ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் வா.சா.ஆ.2 ல் துலங்காது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

21. வா.சா.ஆ.2 தயார் செய்யும் போது 1,2 பிரதிவாதிகள் வந்தார்களா என்றால் 2 ம் பிரதிவாதி மட்டும் வந்தார்.

22. குழந்தையை வாங்கும் போது வா.சா.ஆ.2 தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

23. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குழந்தையின் தந்தையான 1ம் பிரதிவாதி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான்.

24. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சிய கையொப்பம் செய்துள்ள 3 நபர்களும் என் ஊரைச் சேர்ந்தவர்களும் இல்லை உறவினர்களும் இல்லை என்றால் சரிதான்.

25. வா.சா.ஆ.2 பத்திரம் யாரால் வாங்கப்பட்டது என்றால் என்னால் வாங்கப்பட்டது. வா.சா.ஆ.2 பத்திரத்தில் என் பெயரோ, அன்னபூரணி பெயரோ இல்லை என்றால் சரிதான். தெரிந்த நபரை வைத்து வாங்கினேன்.

26. வா.சா.ஆ.2 பத்திரம் 28.11.2014 ம் தேதி ரவி, S.V. கரை என்ற நபர் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் எனக்கு அது பற்றி தெரியாது.

27. வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் மனைவி மகேஷ்வரி கையொப்பமிடவில்லை என்றால் சரிதான்.

28. நான் தத்தெடுத்த குழந்தையின் பிறப்பை 20.12.2015 ம் தேதி குலையநேரி கிராம நிர்வாக அலுவலரிடம் பதிய வேண்டி மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

29. நான் குழந்தையின் பிறப்பை தவறாக பதிந்துவிட்டதாக கூறி 3 ம் பிரதிவாதி என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் எனக்கும் அவருக்கும் சொத்து பிரச்சனை உள்ளது.

30. 3 ம் பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் நானும், என் மனைவியும் வீ.கே.புதூர் வட்டாட்சியரிடம் விசாரணைக்கு ஆஜரானோமா என்றால் இல்லை.

31. நான் சேத்தூரில் பிறந்த குழந்தையை குலையநேரி கிராமத்தில் பிறந்ததாக தவறான சங்கதிகளை குறிப்பிட்டு பதிவு செய்ததால் அது தவறு என தெரிந்து வட்டாட்சியர் குழந்தையின் பிறப்பை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான் சொத்து பிரச்சனை காரணமாக 3 ம் பிரதிவாதி தவறான நடவடிக்கை எடுத்துவருகிறார்.

32. குழந்தையின் பிறப்பை நான் தந்தை என்றும் 2ம் வாதி தாய் என்றும் குறிப்பிட்டு குலையநேரி கிராம நிர்வாக அலுவலரிடம் மனு கொடுத்தேன் என்றால் இல்லை.

33. 1,2 பிரதிவாதிகளிடம் இருந்து நான் குழந்தையை தத்தெடுக்கவில்லை என்றும் குழந்தையை கடத்தி கொண்டு வந்து தவறான சங்கதிகளை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய வழக்கு ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

34. 3ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

35. நான் என் மனைவி பெயரில் 03.07.2017ம் தேதி ஒரு ஏற்பாட்டு ஆவணம் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரிதான்.

36. ஏற்பாடு ஆவணத்தில் ஆவண எண். 2106/2017 குழந்தையின் பெயரில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல.

37. நான் தத்தெடுத்ததாக கூறும் குழந்தையின் மீது அன்பு பாசமும் இல்லாததால் தான் அவர் பெயரில் ஏற்பாட்டு ஆவணம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

38. நான் முறைப்படி தத்தெடுக்காததால் தான் வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனவே என் வழக்கு தள்ளுபடி

செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.